## **முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22 ம் நாள் திங்கட்சிழமை

**இ.ஏ.எண்.13/2025 அதன் இ.பி.எண்.79/2021**
**அதன் அ.வ.எண்.67/1992**

சில்வியா எபனேசர் ...மனுதாரர்/உத்தேச 2 ம் எதிர்மனுதாரர்/ 2 ம் பிரதிவாதி

/எதிர்/

1) ஜானகி ... 1 ம் எதிர்மனுதாரர்/1 ம் மனுதாரர்/வாதி
2) ராஜா முத்தையா ... 2 ம் எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்/ 1 ம் பிரதிவாதி
3) தனபால் ... 3 ம் எதிர்மனுதாரர்/2 ம்மனுதாரர்/ 3 ம் தரப்பினர்

இந்த மனுவானது 10.09.2025 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.A.பாண்டியதேவன் அவர்கள் ஆஜராகியும், 1, 3 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.கிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.S.ஜவஹர்லால் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பினர்களின் வாதங்களைக் கேட்டும் மனு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று வரை இந்நீதிமன்ற ஆய்விலிருந்தும் இன்று இந்த நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**உத்தரவு**

இம்மனுவானது, மனுதாரர்/உத்தேச 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி மேல்முறையீடு தாக்கல் செய்து உத்தரவு பெறும் வரை மேற்படி நிறைவேறுதல் மனு நடவடிக்கையை நிறுத்தி வைத்து உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 41 விதி 5(2) மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2). மனுவின் சுருக்கம் :-**

2.1) இம்மனுவின் மனுதாரர், 1ம் எதிர்மனுதாரர் மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்ற மதுரை கிளையில் S.A.No.161/2008 தாக்கல் செய்த மனுவில் 31.08.2020 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் படி 2ம் எதிர்மனுதாரர் வீட்டை இடித்து 1ம் எதிர்மனுதாரருக்கு சுவாதீனம் தர வேண்டுமென்று, மனுதாரரை தரப்பினராக சேர்க்காமல் இ.பி.எண்.79/2021 என்ற நிறைவேறுதல் மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், அந்த விபரம் தெரிந்த மனுதாரர் உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 47ன் கீழ் தீர்ப்புக்கு பின் எழுந்துள்ள தாவாக்களை தீர்க்கக் கோரி இ.ஏ.எண்.1/2022 தாக்கல் செய்து, மேற்படி மனுவானது 25.07.2025ம் தேதி மனுதாரருக்கு எதிராக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், மேற்படி உத்தரவிற்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்ய இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

2.2) மேல்முறையீடு தாக்கல் செய்து உத்தரவு பெற மனுதாரருக்கு 3 மாத கால அவகாசம் தேவைப்படுகிறது என்றும், இல்லாது போனால் மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட, நஷ்டம் ஏற்படும் என்றும் கூறி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என கூறப்பட்டுள்ளது.

**3). 1, 3ம் எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரை சுருக்கம் :-**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல என்றும், மனுதாரர் நிறைவேறுதல் மனுவிற்கு 3ம் தரப்பினர்

என்றும், அசல் வழக்கானது 26.09.2003 ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், மேற்படி தீர்ப்பை எதிர்த்து 1 ம் எதிர்மனுதாரர் மாண்புமிகு உயர்நீதிமன்றம், மதுரை கிளையில் 2 வது மேல்முறையீடு தாக்கல் செய்து, மேற்படி மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது என்றும், மேற்படி தீர்ப்பாணையை ஆட்சேபித்து மனுதாரர் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்து, மேற்படி மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றும் கூறப்பட்டுள்ளது.

3.2) நிறைவேறுதல் மனு நடவடிக்கைகளை காலதாமதப்படுத்தவே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மாண்புமிகு உச்சநீதிமன்ற அறிவுறுத்தலின் பேரில் அனைத்து நிறைவேறுதல் மனுக்களும் 6 மாத காலத்திற்குள்ளாக முடிக்க வேண்டியுள்ளது என்றும், எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென கூறப்பட்டுள்ளது.

4)**. 2 ம் எதிர்மனுதார் தரப்பு எதிருரை சுருக்கம் :–**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள இ.ஏ.எண்.1/2022 கடந்த 25.07.2025 ம் தேதி முடித்து வைக்கப்பட்டது என்பது உண்மை தான் என்றும், இந்த எதிர்மனுதாரர் மேற்படி இ.ஏ.எண்.1/2022 ன் நகலை இம்மனுவின் மனுதாரர் பெற்றாரா என்று தனக்கு தெரியாது என்றும் கூறப்பட்டுள்ளது. இந்நீதிமன்றம் தனது விருப்பமும், அதிகாரத்தை பயன்படுத்தி நீதிமன்றம் விரும்பும் காலத்திற்குள் தடையாணை பிறப்பிக்கலாம் என கூறப்பட்டுள்ளது.

4) இரு தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**5) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.**

6) இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. இரு தரப்பு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

7) இம்மனுவின் மனுதாரர் இ.ஏ.எண்.1/2022 மனுவின் மனுதாரர் ஆவார். நிறைவேற்றுகை மனுவில் இம்மனுவின் மனுதாரர் தரப்பினர் இல்லை. இம்மனுவின் 1ம் எதிர்மனுதாரர் நிறைவேற்றுகை மனுவின் 1ம் மனுதாரர் ஆவார். இம்மனுவின் 2ம் எதிர்மனுதாரர் நிறைவேற்றுகை மனுவின் எதிர்மனுதாரர் ஆவார். இம்மனுவின் 3ம் எதிர்மனுதாரர் நிறைவேற்றுகை மனுவின் 2ம் மனுதாரர் ஆவார்.

7.1) பிராது தபசில் சொத்தில் எதிர்மனுதாரர் கட்டியுள்ள ஆக்கிரமிப்பு கட்டுமானத்தை அகற்றி மேற்படி சுவாதீனத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்க வேண்டி நிறைவேற்றுகை மனுவானது தாக்கல் செய்யப்பட்டு, அது இ.பி.எண்.79/2021 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது.

8) நிறைவேற்றுகை மனு நிலுவையில் இருக்கும் போது இம்மனுவின் மனுதாரர் உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 47ன் கீழ் தாக்கல் செய்த மனுவை இந்நீதிமன்றத்தால் இ.ஏ.எண்.1/2022 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு, பின்னர் கடந்த 25.07.2025ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்ட அன்றைய தினமே மேற்படி மனுவில் பிறப்பித்த உத்தரவானது E–Court–ல் பதிவேற்றம் செய்யப்பட்டு விட்டது. மேற்படி இ.ஏ.எண்.1/2022ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு E–Court–ல் பதிவேற்றம் செய்யப்பட்டு 55 நாட்களுக்கு மேல் ஆகிறது.

9) நிறைவேற்றுகை மனுவானது 2021ம் ஆண்டு முதல் நிலுவையில் இருந்து வருகிறது. மாண்புமிகு உச்சநீதிமன்றம் Civil Appeal No.3640 – 3642 /2025ல் Periyammal (Dead) Through Lrs and Ors –vs– V.Rajamani & Anr.–ல் பிறப்பித்த உத்தரவிற்கிணங்க மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் ROC.No.21393–B/2025/B5/Statistics பிறப்பித்த வழிகாட்டுதலுக்கு இணங்க நிறைவேற்றுகை மனுவை 6 மாத காலத்திற்குள் முடிக்க வேண்டும்.

10) நிறைவேற்றுகை மனு எண்.79/2021 நிலுவையில் இருந்து வருவதாலும், மனுதாரருக்கு மேல்முறையீடு செய்வதற்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டு விட்டதாலும், நிறைவேற்றுகை மனுவின் உத்தரவானது E–Court–ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட அன்றே பதிவேற்றம் செய்யப்பட்டு விட்டதாலும், நிறைவேற்றுகை மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு இம்மனுவை அனுமதிப்பதற்கு எந்தவிதமான முகாந்திரமும் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியில், இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.**

என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22 ம் நாளாகிய இன்று என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது,

MARIMUTHU R MUNIYASAMY

order uploaded on 22.09.2025
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.09.22 16:47:06 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி,

<u>**1). மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்**</u> – இல்லை

<u>**2).எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்**</u> – இல்லை

MARIMUTHU R MUNIYASAMY

order uploaded on 22.09.2025
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.09.22 16:47:13 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி,

முதன்மை மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி

**இ.ஏ.எண்.13/2025 அதன்**
**இ.பி.எண்.79/2021**
**அதன் அ.வ.எண்.67/1992**

சீரான / வரைவு – உத்தரவு

**22.09.2025.**